21st December 1956]

DEPUTY SPEAKER : **May I know whether the hon. Member** Sri A. Ratnam is withdrawing the cut motion moved by him under Demand XI—District Administration and Miscellaneous?

Sri A. RATNAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய வெட்டுப் பிரேரேபணை என்.ஜி.ஓ.-க்கள் சம்பந்தமானது. அந்த விஷயத்தைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் எந்தவிதமான பதிலும் சொல்லவில்லை. அதனால் என்னுடைய வெட்டுப் பிரேரேபணையை வோட்டுககு விடும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர் என்.ஜி.ஓ.-க்கள் விஷயமாக சொல்லாமல் இருப்பது எப்படி இருக்கிறது என்றால் முழுப் பூசணைக்காயை சோற்றில் அமுக்குவதுபோல் இருக்கிறது. ஆகவே என்னுடைய வெட்டுப் பிரேரேபணையை வோட்டுக்குவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 1,05,00,000 under Demand XI—District Administration and Miscellaneous be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,05,00,000 under Demand XI—District Administration and Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

(5) DEMAND XXII—HARIJAN UPLIFT.

THE HON. SRI B. PARAMESWARAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 40,00,000 as advance grant under Demand XXII—Harijan Uplift."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 40,00,000 as advance grant under Demand XXII—Harijan Uplift."

SRI S. VADIVELU : Sir, I move—

"That the allotment of Rs. 40,00,000 under Demand XXII—Harijan Uplift be reduced by Rs. 100."

DEPUTY SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 40,00,000 under Demand XXII—Harijan Uplift be reduced by Rs. 100."

Both the Demand and the cut motion are now before the House for discussion.

[21st December 1956

Sri S. VADIVELU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஹரிஜன சேரிகளுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கவும், தஞ்சாவூர் ஜில்லாவில் ஹரிஜனங்களை குடியிருப்பு மனைகளிலிருந்து வெளியேற்றக் கூடாது என்பதற்காகவும், ஆரம்பப் பள்ளிகளில் படித்துக்கொண்டிருக்கும் ஹரிஜன, பிற்பட்ட வகுப்பு மாணவ மாணவிகளுக்கு சர்க்கார் செலவில் பலகை, புத்தகங்கள் கொடுத்து உதவி செய்யவேண்டும் என்பதை விவாதிப்பதற்காக, நான் வெட்டுப் பிரேரணையை கொண்டுவந்திருக்கிறேன்.

நாம் சுதந்திரமடைந்து 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய தாழ்த்தபட்ட மக்கள் பெரும்பாலும் வயல்களிலும், பள்ளத்தாக்குகளிலும் தான் வசிக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. காடுகளில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் மழைக் காலங்களில் நடந்து போவதற்கு கூட வழியில்லாத நிலையில் இருக்கிறார்கள். இரவு நேரங்களில் அவர்களுக்கு மின்சார விளக்கு வசதிகள் இல்லாமலிருக்கின்றன. சுதந்திரம் கிட்டியும் அவர்களுடைய நிலை இப்படி இருந்தால் அது நம் நாட்டின் துரதிஷ்டம்தான்.

சென்ற நாலரை வருட காலமாக இந்த சட்ட சபையில், ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனைகளை சொந்தமாக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறோம். கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறோம். குடியிருப்பு மனைக்கட்டு பிரச்னை ஒரு பெரிய பிரச்னை. ஒரு சுதந்திர நாட்டில், பகல் பூராவும் வேலை செய்யும் ஒரு மனிதனுக்கு குந்தியிருப்பதற்கு ஒரு குடிசையில்லை என்றால், அது அந்த நாட்டின் தரித்திர நிலையையே எடுத்துக்காட்டுகிறது. மனைகளை அவர்களுக்கு சொந்தமாக்குவதில் தாமதம் ஏற்பட்டாலும், அவர்களை குடியிருப்பு மனைகளிலிருந்து வெளியேற்றப்படாமலிருப்பதற்கு சர்க்கார் உத்திரவாதமளிக்க வேண்டும்.

சர்க்கார் ஹரிஜனங்களுக்கு கல்விச் சலுகை அளித்திருந்தும் அவர்களுடைய குழந்தைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப முடியாத நிலையில் இருக்கிறார்கள். அன்றாடம் கூலி வேலைசெய்துதான் அவர்கள் குடும்பத்தை நடத்த வேண்டியிருக்கிறது. புத்தகம், பலகை, மற்றும் துணி மணிகள் வாங்கி, கொடுக்கும் நிலையில் ஹரிஜனங்கள் இன்று இல்லை. சர்க்கார் அளிக்கும் கல்விச் சலுகையை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால் அவர்களுடைய குழந்தைகளுக்கு சர்க்கார் செலவில் புத்தகங்கள், பலகை முதலியவைகள் வாங்கிக்கொடுக்கவேண்டும்.

ஹரிஜனங்களுக்கு அளித்திருக்கும் சலுகைகளை பெறவொட்டாமல் தடுப்பதற்கு நிலப்பிரபுக்களும் பலவிதமான முறைகளை கையாளுகிறார்கள். திருத்துரைப்பூண்டி தாலூகாவில் வடுகூர்-மணக்குடி பஞ்சாயத்தில் சாமியப்பன் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் குமஸ்தா வேலை பார்த்து வந்தார். பஞ்சாயத்து தலைவர் வந்தபொழுது, எழுந்து மரியாதை செய்யவில்லை என்ற காரணத்திற்காக அவரை வெளியே பிடித்து தள்ளி, அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்த ஹோட்டலிலும் அவருக்கு சாப்பாடு போடக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அரை மாதம் சாப்பிட்டதற்கு அவர் ஹோட்டலுக்கு பணம் கொடுக்கவேண்டி இருந்தது. அதற்காக அவர் சைக்கிளை பிடுங்கி வைத்துவிட்டார்கள். 1956ஆம் டிசம்பர் மாதம் 15உ அன்று என் வீட்டிற்கு அங்குள்ள ஹரிஜனங்கள் வந்து முறையிட்டார்கள். டைரக்டர் அவர்களுக்கும் கனம் மந்திரி அவர்களுக்கும் தந்தி கொடுக்கச் சொன்னேன். தந்தி கொடுத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இம்மாதிரி சம்பவங்கள் பல இடங்களில் நடைபெறுகின்றன.

கனம் நிதியமைச்சரவர்கள் பேசும்பொழுது ஜன நாயகத்தில் தமக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைப்பற்றி சொன்னார். ஆனால் சென்ற பொதுத்தேர்தலின்போது வலிவலம் தேசிகர் அவர்கள் தனக்கு

21st December 1956] [Sri S. Vadivelu]

சொந்தமாயுள்ள ஏழு கிராமங்களிலுள்ள ஹரிஜனங்கள், வோட்டு போடக் கூடாது என்று சொல்லி அவர்களை தடுத்துவிட்டார்கள். வேறு ஜாதியினராக இருந்தால் இந்தத் தடையை மீறி நடந்திருப்பார்கள். ஜில்லா போர்டு தேர்தல் நடந்தபொழுதும் அவ்வாறே செய்தார். இன்றைக்கு ஸ்ரீ தேசிகர் ஒரு காங்கிரஸ் எம். எல். சி. ஆக இருக்கிறார். அவருடைய கிராமத்தில் ஜனநாயகம் எவ்வாறு தழைத்து ஓங்குகிறது என்பதற்கு இதுவே சான்று. அவர் கிராமத்தில் இருக்கும் ஹரிஜனங்கள் அல்லல் படுகிறார்கள். அங்கு ஹரிஜனங்கள் கட்டிவைத்து அடிக்கப்படுகிறார்கள். தேசப் பிதா காந்தியின் பெயரால், செக்கு இழுத்த சிதம்பரம் பிள்ளையின் பெயரால் இவ்வித அட்டூழியங்கள் நடக்கின்றன. நிலைமை இப்படியிருந் தால் காந்திஜியின் லட்சியம் எவ்வாறு ஈடேற முடியும்? ஆகவே ஹரிஜனங்கள் அவர்களுடைய குடியிருப்பு மனைக்கட்டுகளிலிருந்து வெளி யேற்றப்படாமலிருப்பதற்கு ஒரு பாதுகாப்பு சட்டம் கொண்டுவரவேண்டும். அவர்கள் வசிக்கும் சேரிகளுக்கு மின்சார வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். ஹரிஜன மாணவ மாணவிகளுக்கு சர்க்கார் செலவில் புத்த கம், பலகை முதலியன வழங்கப்படவேண்டும். இவைகளைச் செய்தால் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரும், ஹரிஜனங்களும் வாழ்க்கையில் முன்னேற முடியும் என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The discussion on the Demand will be continued to-morrow. The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow.

The House then adjourned. (1-30 p.m.)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS